**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)

E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ்: 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **K. விஜயன்** | **S.S. சுப்பிரமணியன்** | **E. அந்தோணி** |


நாள்: **1.9.2014**

**பெறுநர்**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,

144, அண்ணாசாலை,

சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : பணியமைப்பு - கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேலாளர் பதவி உயர்வு வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இரண்டாண்டு ஆண்டு முன் அனுபவ காலத்தை ரத்து செய்ய கோருதல் - சம்மந்தமாக.**

**பார்வை : 1) Per (FB) TANGEDCO / Proceedings No. 1** நிர்வாகப்பிரிவு நாள் 4.2.2013

**2) மத்திய அமைப்பு கடித நாள் 17.3.2012**

கணக்கீட்டு ஆய்வாளரிலிருந்து வருவாய் மேலாளர் பதவி உயர்வு வழங்க நிர்ணயிக்கப்பட்ட அனுபவ காலம் இரண்டாண்டு என்பதை ரத்து செய்ய கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகின்றோம்.

தமிழக மின் வாரியத்தில் காலி உள்ள கணக்கீட்டு அலுவலர், வருவாய் மேலாளர், கணக்கீட்டு ஆய்வாளர், கணக்கீட்டாளர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக கணக்கீட்டு ஆய்வாளர் பதவியிலிருந்து வருவாய் மேலாளராக பதவி உயர்வு அளிக்க தகுதி காண் அறிக்கை கேட்கக் நடவடிக்கை எடுக்க வேண்டும், அவ்வாறு தகுதி காண் அறிக்கை கேட்கும் போது, கணக்கீட்டு ஆய்வாளராக இரண்டாண்டு பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்காமல், கணக்கீட்டு ஆய்வாளராக உள்ள அனைவரிடமும் தகுதி காண் அறிக்கை கேட்டு பேனல் பட்டியல் தயாரித்து வருவாய் மேலாளராக பதவி உயர்வு வழங்க வேண்டும்.

தமிழக மின்வாரியத்தில், உதவியாளர், கணக்கு நிர்வாகம் ஆகியோர்களுக்கு கணக்கு மேற்பார்வையாளர், நிர்வாக மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கும் போது, உதவியாளராக இரண்டு ஆண்டு காலம் பணி முடித்த அவர்களுக்கு தான் பதவி உய்ாவு

என்ற நிபந்தனையோ, மின்பாதை ஆய்வாளரிலிருந்து முகவர் முதல் நிலையாக பதவி உயர்வு அளிக்கவோ, பணி அனுபவத்திற்கான நிபந்தனை ஏதும் இல்லாமல் உள்ள போது, கணக்கீட்டு ஆய்வாளருக்கு மட்டும், பதவி உயர்வுக்கு இரண்டு ஆண்டு காலம் பணி அனுபவம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பது பாரபட்சமான நடவடிக்கையாகும் என்பதோடு கணக்கீட்டு, பண வசூல், சரிபார்ப்பு போன்ற பணிகளை கணக்கீட்டாளராக இருந்த போது செய்த பணி அனுபவமும் உள்ளது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து கணக்கீட்டு ஆய்வாளரின் அடுத்த பதவி உயர்வுக்கு இரண்டு ஆண்டு அனுபவம் வேண்டும் என்ற சரத்தை ரத்து செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, கணக்கீட்டு ஆய்வாளருக்கு அடுத்த பதவி உயர்வுக்கு விதித்துள்ள தேவையற்ற நிபந்தனையை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்